# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### ஒப்பந்த ஊழியர்களின் டெல்லி பேரணி

அன்பார்ந்த தோழர்களே

தங்களின் பத்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து ஒப்பந்த ஊழியர்களின் சம்மேளனம் BSNLCCWF நடத்திய டெல்லி பேரணி வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து பெருந்திரளான ஒப்பந்த ஊழியர்கள் பங்கேற்ற இந்த பேரணி டெல்லியில் உள்ள ESTERN COURTல் சக்தியான ஆர்ப்பாட்டம் பொதுக்கூட்டத்துடன் துவங்கியது. இந்த பேரணியை BSNLCCWFயின் தலைவர் தோழர் VAN நம்பூதிரி தலைமை தாங்கினார். CITUவின் அகில இந்திய தலைவர் தோழர் AK பத்மநாபன் இந்த பேரணியை தனது கம்பீரமான உரையின் மூலம் துவக்கி வைத்தார். BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, துணை பொது செயலாளர் தோழர் அனிமேஷ் மித்ரா மற்றும் BSNLCCWFன் பொது செயலாளர் தோழர் தபாஸ்குமார் கோஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். அதன் பின்னர் துவங்கிய பேரணி கார்ப்பரேட் அலுவலகம் அடைந்ததும் சக்தி மிக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதன் பின்னர் BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தலைவர் தோழர் VAN நம்பூதிரி, துணை பொது செயலாளர் தோழர் அனிமேஷ் மித்ரா பொருளாளர் தோழர் S.C.பட்டாச்சார்யா, உதவி பொது செயலாளர் தோழர் சுவபன் சக்கரவர்த்தி மற்றும் BSNLCCWFன் பொது செயலாளர் தோழர் தபாஸ்குமார் கோஷ் ஆகியோர் BSNLன் CMD திரு AN.ராய் அவர்களை சந்தித்து ஒப்பந்த ஊழியர்களின் பத்து அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கி விவாதித்து உள்ளனர்.

இந்த போராட்டம் வெற்றி பெற பாடுபட்ட அனைத்து தோழர்களையும், அந்த போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து தோழர்களையும் தமிழ் மாநில சங்கம் வாழ்த்துகிறது. தமிழகத்தில் இருந்து இந்த போராட்டத்தில் TNTCWU வின் மாநில செயலாளர் தோழர் C.வினோத்குமார், உதவி செயலாளர் தோழர் C.பழனிச்சாமி அகில் இந்திய துணை பொது செயலாளர் தோழர் குமார் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றுள்ளனர். அவர்கள் அனைவரையும் தமிழ் மாநில சங்கம் மனமார பாராட்டுகிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்





